# NILIS

# தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்

# கொழும்புப் பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

கொழும்புப் பல்கலைக்கழக தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகப் (தே.நூ.த.அ.நி.) பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள்/பரிந்துரைகளைக் வரவேற்கின்றது.

விணப்பதாரி/பரிந்துரைக்கப்படுபவர் இலங்கையின் குடிமக்களாக இருப்பதுடன் 63 வயதிற்கும் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். வெற்றிபெறும் விண்ணப்பதாரி/பரிந்துரைக்கப்படுபவர் நியமனத் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்திசெய்யும் வரையில், எது முதலில் நிகழ்கிறதோ அதுவரை பதவில் இருப்பார்.

தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, சான்றிதழ், டிப்புளோமா, மற்றும் பட்டப்பின் பட்டங்களுக்கு இட்டுச் செல்லும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகத்தின் மாணவர் தொகை பிரதானமாக பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தற்பொழுது பணியாற்றுகின்றவர்களை உள்ளடக்குகிறது. அது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளிலும் கூட ஈடுபடுகிறது.

பணிப்பாளர் நிறுவனத்தின் முதன்மை நிறைவேறு அதிகாரியாகவும் அதன் கல்விசார் அலுவலராகவும் இருப்பர். அவர் நிறுவகத்தின் பொறுப்புக் கூறும் அதிகாரியாகவும், நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் கல்விக் குழுவின் பதவி-வழி உறுப்பினராகவும் இருப்பர். அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்கி, முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் செயல்ப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருப்பார். அவர் நிறுவனத்தின் பொது நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பார், ஆகவே கல்விசார் சால்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம், மற்றும் பயனுறுதியான பாகுபாடற்ற மற்றும் நிர்வாகத் தலைமைத்துவம் ஆகிய கோட்பாடுகளை நிலைநிறுத்துபவராக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் பொறுப்பாக இருப்பார். அவர் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள், மற்றும் பணியாளர்களின் தேவைகளைப் பற்றிய ஒரு புரிதலைக் கொண்டிருக்க வேண்டும், மேலும் நிதிகளைத் தோற்றுவிக்கக் கூடியவராகவும், மற்றும் பல்கலைக்கழக-நிறுவன மேம்பாடு மற்றும் தொழிற்றுறைக் கூட்டுழைப்பு, அத்துடன் விவகாரங்களில் சர்வதேச உறவை ஏற்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் தனது அறிவுசார் புலமை மற்றும் நிர்வாகத்திறன் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை அடையக்கூடிய ஒரு நோக்கினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி/பரிந்துரைக்கப்படுபவர் உயர் கல்விப்புலமைசார் திறன்கள் மற்றும் நேர்மைத்திறன் உடையவராகவும் சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுத் தோற்றப்பாட்டுப் பதிவுகள், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவப் பண்புகளுடன் உயர் தர ஒருவருக்கொருவர் இடையிலான திறன்கள், மற்றும் கொள்கை ரீதியான பிரச்சினைகள் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் ஒரு பேராசிரியரின் சம்பளம் மற்றும் பதவிக்குப் பொருந்தும் பிற படிகளைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவர் ஆவார்.

பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பங்கள்/பரிந்துரைகளுடன் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

(i) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரி/பரிந்துரைக்கப்பட்டவரின் பூரணமான சுயவிபரம் (பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்).

(ii) கல்வி மற்றும் ஆராய்ச்சி சிறப்பம்சங்கள், தொழில்முறைத் தொடர்பாடல்கள், மற்றும் நிர்வாகத் திறன்கள், வினைத்திறனான தலைமைத்துவம் போன்றுவற்றுக்கான ஆதாரங்களின் நகல்கள்.

(iii) நிறுவனத்தின் மேம்பாட்டிற்கான நோக்குப் பற்றிய கூற்று

(iv) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் எதனை அடைவதற்கு முன்மொழிகிறார் என்பது பற்றிய ஒரு சுருக்கமான விபரம்

(v) பரிந்துரையாக இருப்பின், பரிந்துரைக்கப்பட்டவரின் ஒப்புதல் கடிதம்

(vi) தே.நூ.த.அ.நி. தவிர்ந்த பிற பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான அமைப்புக்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவராயின், பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரி/பரிந்துரைக்கப்படுபவர் குறித்த நிறுவனத்தில் இருந்து விடுவிக்கப்படலாம் என்பதைக் குறிக்கும் நிறுவனத் தலைவரின் கடிதம்

விண்ணப்பங்கள்/பரிந்துரைகள் கடித உறை ஒன்றினுள் இடப்பட்டு முத்திரையிடப்பட்டு சிரேஷ்ட உதவிப் பதிவாளர், தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்பு -03, அவர்களுக்கு முகவரியிடப்பட்டு அவர்களது அலுவலகத்தில் கிடைக்கப்பெறுமாறு அல்லது பதிவுத் தபாலில் 2020 நவம்பர் 23 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை/பரிந்துரையினைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடது-பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வுக்கு வேட்பாளர்கள் நேரில் வருமாறு அழைக்கப்படுவார்கள். ஒரு விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஒரு வேட்பாளர் நேரில் ஆஜராகும் நிலையில் இல்லை என்றால், அவர் ஒரு கணொளி மூலமான அல்லது ஸ்கைப் வழியாக நேர்முகத் தேர்வுக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். ஒரு வேட்பாளர் சுருக்கமான விளக்கக்காட்சியைச் சமர்ப்பிப்பதற்குத் தயாராக வேண்டும், குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். செப்டம்பர் 11, 2020 திகதியிட்ட பா.மா.ஆ. சுற்றறிக்கை இல. 07/2020 இன் இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட புள்ளியிடல்தாள், கட்டளைவிதி மற்றும் கூறுகளின் படி நேர்காணல்கள் நடைபெறும், இதனை https://nilis.cmb.ac.lk/wp-content/uploads/2020/10/2221_Commission-Circular-No.-07-2020-English.pdf என்ற இணையத்தளத்தில் அணுகலாம். இது பா.மா.ஆ. வலைத்தளத்திலிருந்தும் கூட அணுக்கப்படக் கூடியதாக உள்ளது. (https://www.ugc.ac.lk)

முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள்/பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முகாமைத்துவச் சபையின் செயலாளர்
தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
https://nilis.cmb.ac.lk
22/10/2020